SUPPLEMENT TO THE CATHOLIC GUARDIAN

# சத்தியவேத பாதுகாவலன்

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.

Telegram: "GUARDIAN" JAFFNA. Telephone: No. 100.

வெள்ளிக்கிழமைதோறும் பிரசுரமாகும்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

70-ம் புத்தகம் 19-ம்இல. யாழ்ப்பாணம் 1945-ம் ஆண்டு வைகாசிமாசம் 25-ந்திகதி வெள்ளிக்கிழமை—பிரதி சதம் 5

## தேச வர்த்தமானம்

**வணக்கமாச முடிவு விழா**—நம்முடைய ஆசனக்கோவிலிலே நடைபெற்று வருகின்ற தேவதாயாரின் வணக்கமாசக் கொண்டாட்ட முடிவுவிழா நாளைநின்று வரும் 27-ந்திகதி ஞாயிறுவாரம் நடந்தேறும். அன்றுகாலை 7 மணிக்குப் பாடற்பூசை நிறைவேறும். சாயந்தரம் வேஸ்பரோடும், தேவதாயாரின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்தோடும், தேவநற்கருணை ஆசீர்வாதத்தோடும் விழா முடிவாகும்.

**பட்டினமும் பஸ்சேவையும்**—யாழ்ப்பாணப் பட்டினசங்கத்தின் மாசாந்தகூட்டம் சென்ற வெள்ளிக்கிழமை நடந்தேறியது. அதிலே மோட்டர் பிரயாணபகுதித் தலைவரின் அனுமதியோடு யாழ்ப்பாணப் பட்டினத்திலே ஓர் மோட்டர் பஸ் பிரயாணசேவையை நடத்துவதற்கான ஒழுங்குகளைச் சங்கம்செய்யவேண்டுமென்று ஓர் பிரேரணை அரங்கேறியிருக்கிறது. இதுவிஷயமாய் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துச் சங்கத்துக்கு அறிக்கையிடுவதற்கென்று அங்கத்தவர்கள் மூவரை அடக்கிய ஓர் கொம்மிற்றி ஆக்கப்பட்டிருக்கிறது.

**பட்டினசங்கமும் யுத்தவெற்றியும்**—ஐரோப்பிய யுத்தம் வெற்றிகரமான ஓர் முடிவுக்கு வந்ததையிட்டு மாட்சிமைதங்கிய மன்னர்பிரானுக்குத் தனது இருதய பூர்வமும் இராசபக்தி பற்றுதலுமான சோபனவாழ்த்துக்களைப் பட்டினவாசிகளின் நாமத்தினலே சமர்ப்பிக்கும் பிரேரணையொன்றை யாழ்ப்பாணப் பட்டின சங்கம் தனது மாதாந்த கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றியிருக்கிறது.

**160 மூடை அரிசி**—தென்னிந்தியாவிலே கூடலூரைச்சேர்ந்த தோணியொன்று 160 மூடை முத்துச்சம்பா அரிசியுடன் காங்கேசன்துறை - மயிலிட்டிக் கரைக்கப்பால் மேல்கடலிலே வந்தபோது சென்ற சனிக்கிழமை நடுப்பகலில் 'லையன்' எனும் துறைமுக லோஞ்சினல் பந்தயஓட்டத்திலே துரத்துசென்று பிடிக்கப்படலாயிற்று. இந்த 160 மூடை முத்துச்சம்பா அரிசியும் கள்ளமாக்கெற்றில் இருபதினயிரம்ரூபாவரையில் பெறுமதியுடையதாம். தோணியும், அரிசியும் காவலில் வைக்கப்பட்டுள்ளன.

**கிளேறிக்கல் பரீட்சை**—அரசாங்க பொதுக் கிளேறிக்கல் வகுப்பிலே இரண்டாவதுபிரிவில் கிளாக்குமாராகச் சேவைபுரியவிரும்பும் ஆடவர்களுக்கென்று கிளேறிக்கல்சேவைப் பரீட்சையொன்று வருகிற ஆவணிமாசம் 11-ந்திகதி கொழும்பு கண்டி, காலி, யாழ்ப்பாணம் எனுமிடங்களிலே நடக்கவிருக்கின்றது. வித்தியா கர்த்தரிடமிருந்து வருகிற ஆனிமாசம் 4-ந்திகதி வரையிலே மனுப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். ஆனிமாசம் 9-ந்திகதி பிற்பகல் 2 மணிக்குமுன் மனுப்பத்திரங்கள் அனுப்பப்படவேண்டியன,

**சிங்கள சங்கீதப்போட்டி**—வித்தியா பகுதியால் ஒழுங்குபடுத்தப்பெற்ற அகில இலங்கைச் சிங்கள பாடசாலைகளின் சங்கீத-நாடகப்போட்டி சென்ற சனியும், ஞாயிறும் கொழும்பு நகரமண்டபத்திலே நடந்தேறியது. அதிலே வெண்ணப்புவாக் கத்தோலிக்க ஆண்பாடசாலை நான்கு வெற்றிகளும், முகமக் கத். பாடசாலை இரு வெற்றிகளும், கட்டுக்குருந்தைக் கத். கலவன்பாடசாலை இருவெற்றிகளும், சீதுவாக் கத். ஆண்பாடசாலை ஒருவெற்றியும், நஞ்சுண்டான்கலரக் கத். ஆண்பாடசாலை ஒருவெற்றியும், கொட்டாஞ்சேனை சந்த லூசியாவின் கத். இருபாஷா பாடசாலை ஒருவெற்றியுமாகக் கத்தோலிக்க பாடசாலைகள் பதினெரு வெற்றிகள்பெற, அப்போட்டியிற் கலந்துகொண்ட புத்தபாடசாலைகளில் இரண்டு மாத்திரம் தலைக்கு இரண்டுவெற்றிகள் பெற்றிருக்கின்றன.

**காணிபற்றிய பிணக்கு**—புலோலி தெற்கிலே சி. முருகேசு என்பவர் சென்ற வாரம் கடினகாயங்களுடன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டு ஞாயிற்றுக்கிழமை இறந்துபோயினர். ஓர் காணியையிட்டு உண்டான பிணக்குக் காரணமாக வேலுப்பிள்ளை வீரகத்தி அல்லது பொன்னு என்பவன் அவரைக் குற்றியதாகச் சொல்லப்படுகிறது.

**அம்பாந்தோட்டைப் பிரதிநிதி**—அரசாங்கசபையிலே அம்பாந்தோட்டைப் பிரதிநிதியாய் இருந்துவருகிறவரான திரு. டி. எம். இராசபக்ஷி அவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை அதிகாலை கொழும்புப் பெரிய ஆஸ்பத்திரியிலே இறந்துபோயினர். முதனாள் இவர் அரசாங்கசபைக் கூட்டத்தில் சமுகமாயிருந்து, அன்றுபிற்பகல் 6 மணிக்குக் கூட்டம் முடிந்தபோது நல்லசுகத்துடன் இருக்கக் காணப்பட்டார். அன்றிரவு இவர் அரசாங்கசபைக் கட்டிடத்திலேயே தங்கியிருந்து, இராப்போசனத்தின்பின் படுக்கைக்குச்சென்றார் பின்னர் இரவு 3 மணிவரையில் நோய் கண்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டு 5 மணிக்குக் காலஞ்சென்றார். 1936-ம்ஆண்டின் பொதுத்தேர்தலிலே இவர் அம்பாந்தோட்டைப் பிரதிநிதியாகத் தெரியப்பெற்றுக் கமத்தொழில் சம்பந்தமான விஷயங்களில் மிகுந்த சிரத்தை எடுத்துவந்தார். மரிக்கும்போது இவருக்கு வயசு 46.

**கொழும்பிலே தண்ணீர்ப்பஞ்சம்**—தற்போது கொழும்புநகரிலே நாளொன்றுக்கு 1 கோடியே 70 லட்சம் கலன் குழாய்த்தண்ணீர் செலவாகிறது. இந்த விதமாகச் செலவாகுமிடத்து அத்தண்ணீரை உதவும் லபுகாமவாவியில் தற்போது இருக்கும் தண்ணீர் ஏறக்குறைய இரண்டுவாரத்துக்கே போதியதாகும். லபுகாமவாவிக்குத் தண்ணீர்வரும் பகுதிகளில் இவ்வருடமுதல் மழைபெய்யாமையே தண்ணீர்ப்பஞ்சத்துக்குக் காரணமென்று சொல்லப்படுகிறது. அதனல், நகர்வாசிகள் குழாய்த்தண்ணீரைக் கட்டுமட்டாகப் பாவிக்குமாறு எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**புகையிலை, குடிவகைத் தீர்வை**—புகையிலை, குடிவகை ஆதியவற்றிற்கு விதிக்கப்பட்டிருந்த அவசரகால துறைமுகத்தீர்வை மற்றுமோர் வருடத்துக்கு நீடித்திருக்கவேண்டுமெனச் சென்றவெள்ளிக்கிழமை அரசாங்கசபையிலே தீர்மானமாயிருக்கிறது. இந்தத் தீர்வையாலே வருடமொன்றுக்கு அரசினருக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் 1 கோடியே 70 லட்சம் ரூபா.

**நாலுகலன் பெற்றேல்**—மருதானையிலே வசிக்கும் பெலிசிங்கோ என்பவன் நாலுகலன் இராணுவபெற்றேல் களவாக வைத்திருந்து அகப்பட்டுச் சென்றவெள்ளியன்று கொழும்புக்கோட்டிலே குற்றவாளியாகி ஆயிரம்ரூபா அபராதம் விதிக்கப்பட்டிருக்கின்றான்.

**பஸ் விபத்து**—காங்கேசன்துறையிலிருந்து சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணத்தைநோக்கி வந்துகொண்டிருந்த பஸ் ஒன்று தெல்லிப்பழையிலே ஒன்பது வயசுள்ள ஓர் பையனை இடறிவிடவே, அவன் நெரிந்து அவ்விடத்திலேயே இறந்தனனும். அதன்மேல் பஸ் அங்குநின்ற ஓர் மாட்டுவண்டியிலும், பிறகு வீதியின் பக்கமாகவிருந்த ஓர் கடையிலும்போய் மோதியது. [illegible] தக்காரனும் [illegible] மடைந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டனன். பஸ்சாரதி காவலில் வைக்கப்பட்டிருக்கிறான்.

**செலவிலும் கூடிய வருமானம்**—நிகழும் அரசிறை வருடத்திலே சென்ற ஐப்பசிமுதல் சித்திரை ஈறாகவுள்ள ஏழு மாசங்களிலும் நமது அரசினருக்குக் கிடைத்த வருமானத்திலே செலவுக்குக்கண்டு 4 கோடியே 9 லட்சம் ரூபா எஞ்சியிருக்கிறது. ஏழுமாசங்களிலும் வந்தவருமானம் 16 கோடியே 3 லட்சம் ரூபா. சென்றசெலவு 11 கோடியே 94 லட்சம் ரூபா. சென்ற சித்திரைமாச வருமானத்திலே செலவுக்குக்கண்டு 35 லட்சம்ரூபா எஞ்சியிருக்கிறது.

## ஐரோப்பிய வெற்றியின் சிந்தனைகள்

ஆசிரியர் எம். டி. டானியேல் றேச்

உலகமக்கள் அமைதியாகவும், சந்தோஷமாகவும் உண்டு உடுத்துக் களித்துவந்தார்கள். அரசர்கள் கவலையின்றிப் பிரசைகளை ஆண்டுவந்தார்கள். விஞ்ஞானிகள் தங்கள் வித்தாண்மையை மேலும் மேலும் பெருக்கிவந்தார்கள். "சும்மா கிடந்தசங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி" என்றவாறு தன்பாட்டிற் சென்றுகொண்டிருந்த உலகைத்தூக்கி 50-ம்வயதின் விளையாட்டொன்று விளையாடிப்பார்க்க ஆசைப்பட்டான் ஹிற்லர். அதன்பயனாக 1939 இல் தொடங்கிய யுத்தம் எத்தனையோ அலங்காரமாளிகைகளை அலங்கோலமாக்கியும், விஞ்ஞானநிலையங்களை அஞ்ஞான நிலையங்களாக்கியும், கல்விக்கழகங்களைக் கல்லுத்தளங்களாக்கியும் உலகத்தையே உருக்குலைத்துவிட்டது.

உலகம் ஒருகாலத்தும் கண்டுகேட்டிராத பயங்கர போர்க்கருவிகளைப் பாவித்தான் ஹிற்லர். நமது பிரித்தானியசேனைகளை அநேகமுறை பின்வாங்கச்செய்தான் ஹிற்லர். எத்தனையோ இராச்சியங்களை அபகரித்துக்கொண்டு அரசர்களைத் தேசாந்திரியாக்கினன் ஹிற்லர். வெற்றிவெற்றி என்று எழும்பிவந்த ஹிற்லரைத் தடுக்க முடியாமல் தவித்துக்கொண்டிருந்தன உலகஅரசுகள். பிரித்தானிய தலைவர்களின் மூளைகள் மெஷின்வேலைசெய்ய ஆரம்பித்தன. மந்திரிசபைகள் மாற்றமடைந்தன. திரு. சேர்ச்சில் பிரதம மந்திரியாயினர். சோதிடங்கள் ஒற்றை ஒற்றையாகப் புரளத்தொடங்கிவிட்டன. சேர்ச்சிலின் வீரகர்ச்சனையைக்கண்ட ஹிற்லரின் கழுத்து மெல்லமெல்ல உள்ளே வாங்கப்பட்டது.

காலாகாலத்தில் அதிக்கிரமங்கொண்ட அரசர்களால் உலகம் அல்லோலகல்லோலப்படுகிறது. அவர்களுடைய அகங்காரங்களின் எழுச்சிகள் பதினயிரம் லட்சம் உயிர்களைப் பலிவாங்கிவிடுகின்றன. அவர்களுடைய பூமிபிடிக்கும் மண்ணாசை பெற்றோரைஇழந்த எத்தனையோ அநாதைக் குழந்தைகளையும், புருடரைஇழந்த கைம்பெண்களையும், வாழ்வு பாழான வாலிபர்களையும் சிருட்டித்துவிடுகின்றது. இவ்வித அதர்மவேலையில் கையிட்ட எத்தனையோ அரசர்கள் அசுரர்களாகித் தங்கள் நோக்கம் நிறைவேறாது தாங்களும் அதற்குப் பலியாயினரென்று சரித்திரவாயிலாய்அறிந்த உண்மையை அனுபவவாயிலாகவும் இப்போது அறிந்துகொண்டோம்.

மேலேகூறிய லட்சணங்கள் அமைந்து இத்தாலிய சர்வாதிகாரியாயிருந்து உலகப்பிரசித்திபெற்ற முசோலினி அபிசீனியாவுக்கிழைத்த அதிக்கிரமத்தைத் தன் பிற்காலத்தில் அனுபவித்து நிர்ப்பாக்கியமாய்ச் சுட்டுக்கொல்லப்பட்டார். காட்டிலும் மேட்டிலும் கடலிலும் ஆகாயத்திலும் உலகின் மூலைமுடுக்குகளிலும் பெரியோர் சிறியோராலும் ஹிற்லர் ஹிற்லர் என்று பேசப்பட்ட ஜேர்மன் சர்வாதிகாரியின் எழுச்சியின்காலம் பன்னிருவருடங்களாயிருந்தும் அதில் அரைப்பாகமாகிய ஆறுவருடங்களையும் ஆறுதலில்லா யுத்தத்திற்கழித்து, உலகின் ஓர்பாகத்தை அழித்து அவர்கண்ட பலன்தானென்ன? அவருடையதிறமை அவருடைய எண்ணத்தை முடித்ததா? அவருடைய பரிவாரங்களும் படைபண்டாரங்களும் அவரது ஆசையைப் பூர்த்திசெய்தனவா? இல்லை. எல்லாம் அவருக்கே வினையமாக முடிந்தது. அவருடைய நோக்கங்கள் நிர்மூலமாக்கப்பட்டன. அவருடைய வாழ்க்கை முடிவைத்தேடிக்கொண்டது. ஆனல், பரந்த உலகம் மாறவில்லை. அது முடியவில்லை. சாம்பிராச்சியங்களைப் பெருக்க முயன்ற அலக்சாந்தர், நெப்போலியன் ஆதியோர் போனவழிதான் மகாவீரன் ஹிற்லருக்கும் கிடைத்தது.

ஆறுவருடகாலமாக இப்பூவுலகைச் சூழ்ந்திருந்த ஐரோப்பாவின் பயங்கரமான நீடித்தஇருளின்இரவு விடிந்துவிட்டதைக் கொண்டாடுகிறோம். பிரித்தானிய சாம்பிராச்சியத்தின் வீரவெற்றியைக் கொண்டாடுகிறோம். நம் மாட்சிமைமிக்க மன்னரின் தர்மஆட்சியைக் கொண்டாடுகிறோம். யுத்த ஆரம்பத்திலிருந்த நமது பலவீனத்தைப்போக்கி மலைபெயரினும் நிலைபெயரா வச்சிரமனம்படைத்த வெற்றிவீரரும், எமது நன்றிக்குரியாருமாகிய பிரதமமந்திரி சேர்ச்சிலைக் கொண்டாடுகிறோம். தங்கள் உயிரையும் உடலையும் திரணமாக மதித்து வெற்றியின்ஆசையால் வீராவேசங்கொண்டு யுத்தகளம் சென்று போர்செய்த வீரசிகாமணிகளைக் கொண்டாடுகிறோம்.

இவ்விருபதாம் நூற்றாண்டுயுத்தம் அரசரின் தனியுத்தமல்ல. மந்திரியாரின் தந்திரத்தில்தங்கிய யுத்தமுமல்ல. யுத்தகளம் சென்று உயிர்ப்பலியான வீரரின் தனிப்பட்ட யுத்தமுமல்ல. ஆனல், உலகத்திலுள்ள சகல பிரசைகளினதும் ஒத்துழைப்புக்குரிய யுத்தமாயிருப்பதால் எம்மவர் சகலரையும் கொண்டாடுகிறோம். கடைசியாக நீதியின் தலைவரும், தருமத்தின் தந்தையும், இவ்வெற்றியின் மூலகர்த்தாவுமாகிய கடவுளின் அருளைக்கொண்டாடுகிறோம். அவரின் திருவடிகளுக்கு எங்கள் முடிகள்சாய்ந்த வணக்கத்தைச் சமர்ப்பிக்கின்றோம்.

நாம் சென்ற ஆறுவருடங்களையும் ஆறுயுகங்களாகக் கழித்ததோடு எவ்வளவோ சிறந்த பாடங்களையும் கற்றுக்கொண்டோமல்லவா? இவ்விருபதாம் நூற்றாண்டு கல்விகலைக்கியானங்களிலும், நவநாகரீகங்களிலும்சிறந்து சுகபோகம்நிறைந்து உலகமே சுவர்க்கமென்ற மமதைகொண்டு கடவுளையே மறந்தநிலைமைக்கு வந்துவிட்டது. ஆனல், யுத்தத்தின் முடிவில் "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்ற பாடத்தைச் சந்தேகமறப் பலரும் கற்றுக்கொண்டனர். ஒருவருக்கொருவர் உதவி புரியப் பயின்றுகொண்டனர். எல்லா வேலையும் எல்லோர்க்குஞ் சொந்தமென்ற நிலைமைக்கு வந்துவிட்டனர். கந்தோர்களில் உல்லாசமாயிருந்து பழகினோர் கமநிலங்களிலும் கடற்கரைகளிலும் கைநீட்டிப் பல்காட்டப் பழகிவிட்டனர். பசி கிடக்கத்தெரியாத எத்தனையோ சுவர்க்க மக்கள் பட்டினிகிடக்கத் தங்கள் வயிற்றைப் பழக்கிக்கொண்டனர். வெயில் முகங்காணத பிரபுக்கள் உச்சிவெரியநடக்கவும், உள்ளங்கால்தீய ஓடவும் பழகிக்கொண்டனர்.

தங்கள் சீவியத்தைச் செலுத்தமுடியாமற் தவித்தபலர் பற்பல தொழில்களைப் பயின்றுகொண்டனர். பணத்தைத் தாராளமாகச் செலவழித்துப் பழகிவிட்டோமே; திருந்தவழி தெரியாமல் திகைக்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாங்குளம் கிறீஸ்து இராசா கோவிற் திருநாள்

வழமைப்பிரகாரம் மேற்படி கோவிலின் வருஷாந்ததிருநாள் ஆனிமாசம் 3-ந்திகதி ஞாயிறுவாரம் நடைபெறும்.

திருநாளுக்கு ஆயத்தமாக மூன்று நோவனைகள் வைகாசிமாசம் 31-ந்திகதி ஞானஒடுக்கத்துடன் ஆரம்பமாகும்.

ஆனிமாசம் 2-ந்திகதி இரவு அர்ச். ஸ்நாபக அருளப்பர்சரிதை நாடகமுறையில் நடிக்கப்படும்.

எஸ். ஏ. சுவாம்பிள்ளைச் சுவாமியார்
கட்டளைக்குரு

## அர்ச். பதுவை அந்தோனியார் திருநாள்
### Wahacotte

சரித்திர சம்பந்தமான கத்தோலிக்க நாடாகிய இவ்விடத்தின் பாதுகாவலரான அர்ச். அந்தோனியார் திருநாள் 1945-ம் ஆண்டு ஆனிமாதம் 17-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை மிகச் சிறப்பாய்க் கொண்டாடப்படும்.

திருநாளுக்குமுன் நடத்தப்படும் நோவனை ஆனிமாசம் 1-ந்திகதி துவக்கப்படும் ஆனிமாசம் 16-ந்திகதிசனிக்கிழமை வேஸ்பர் பாடப்படும்.

கண்டி மேற்றிராணியாராகிய மகாவந். டீ. பீ. றெஞோ ஓ. எஸ். பி. ஆண்டவரவர்கள் சமுகமளிப்பார்கள். குருமார் பலர் சமுகமாயிருப்பார்கள்

புகையிரத ஸ்தானம் மாத்தளை, மாத்தளையிலிருந்து வஹாக்கோட்டைக்குதூரம் 20 மைல். எப்போதும் பஸ்வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கும். கிடுகினல் செய்யப்பட்ட வாடிவீடுகள். (தனிஆளுக்கு, சமுசாரிகளுக்கு வேண்டியவர்கள் மே மாதம் 31-ந்திகதிக்குமுன் கேட்கக்கடவார்கள். விசேஷ நோவனை வேண்டியவர்களும் கேட்கக்கடவார்கள். ஒருநோவனைக்கு சலார் ரூபா 10 சதம் 50.

டீ. என். கேபலின், ஓ. எஸ். பீ.
கட்டளைக் குருவானவர்
சென்ற் அன்றனிஸ் வஹாக்கோட்டை
மாத்தளை

## அர்ச். பிலிப்புநேரியார் திருநாள் (26-5-45)
### அல்லைப்பிட்டி

மேற்படி திருநாள் வழமைப்பிரகாரம் இம்மாசம் 17-ந்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 26-ந்திகதி பாடற்பூசையுடன் முடிவடையும். யாத்திரிகர் தங்கள் உணவுப்பொருட்களுடன் வரவேண்டும். வேறுவசதிகள் யாவும் கிடைக்கக்கூடியதாயிருக்கும்.

26-ந்திகதி விஜயமனோகரன் நாடகம் நடாத்தப்படும்.

A. Leborgne O. M. I.
கட்டளைக்குரு


## புத்தக அறிவித்தல்

| | விலை சதம் | தபாற்கூலி சதம் |
|---|---|---|
| அர்ச். தொம்மை அப்போஸ்தலர்அம்மானை | 25 | 6 |
| அங்கீகரிக்கப்பட்ட ஐந்து பிரார்த்தனைகள் | 15 | 6 |
| அர்ச். அந்தோனியார்தோத்திரப்பாமாலை (பல நவீன மெட்டுகளடங்கியது | 10 | 3 |
| கொமிக்—பபூண் — தீண்டாமைப் பாட்டுகள் ஒருடசின் பிரதிகள் | 25 | 6 |

சொற்பபிரதிகளேகைவசமிருக்கின்றன. தேவையானோர் பின்வரும் விலாசத்துக்கு எழுதிப்பெற்றுக்கொள்க.

விலாசம்:—

எஸ். எம். இன்னாசிமுத்து
மாஜி உபதேசியார்,
நெம். 6, சவரிமுத்து முதலியார்றோட்டு
யாழ்ப்பாணம்.



# சத்தியவேத பாதுகாவலன்

1945-ம் ஆண்டு
வைகாசிமாசம் 25-ந் திகதி


### யாழ்ப்பாண மேற்றிராணி ஆண்டவர் அவர்கள்
## திருஇருதய சின்னச்சிலுவைப்படை வீரர்களுக்கு விடுக்கும் சுற்றுநிருபம்

அருமையான சின்னச்சிலுவைப்படை வீரர்களே,

திருஇருதயத் திருநாள் கிட்டிவருகின்றது. அது ஆண்டவருக்கு மிகவும் உவப்பான திருநாள். சிலுவை வீரர்களுக்கு விசேஷித்ததினம். சிலுவை வீரர்களாகிய நீங்கள் திருஇருதயத்தின் வீரர்கள் அல்லவா? ஆனபடியால் அத்திருநாளை நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றீர்கள். ஆண்டவர் அதிகம் அதிகம் அறியப்படவேண்டும், அவர் நேசிக்கப்படவேண்டும் என விரும்பி நீங்கள் ஆண்டவருக்கு அதைப்பற்றிப் பொருத்தனை செய்துகொண்டீர்கள். அவருடைய மகிமை உலகம் எங்கும் பரம்புவதற்காக நீங்கள் உங்களைத் திருஇருதயத்துக்குக் கையளித்துப்போட்டீர்கள். திருஇருதயத்திருநாளில் சிலுவைவீரர்கள் எல்லாரும் அவருடைய விருந்துப்பந்தியில் பங்குபற்றுவார்கள் என எல்லாரும் காத்திருக்கிறார்கள். இன்னும் அவருடைய திருச்சுரூபத்தின்முன் வீரர்கள் எல்லாரும் ஒன்றுகூடி, திருஇருதயநாதருக்குத் தங்கள் இராசபக்தியையும் விசுவாசத்தையும் பிரசித்தமாக அறிக்கையிடுவார்கள். அப்போது நீங்கள் ஆண்டவருக்குச் செய்த பொருத்தனைகளையும் வாக்குகளையும் புதுப்பித்தல்வேண்டும்.

நற்கருணைப்பந்தியிற் பங்குபற்றுதல், திருஇருதயத்துக்குப் பிரமாணிக்கமாக இருப்பதாக அறிக்கையிடுதல், சகலருடையவும் பொதுக்கருத்துகள் விசேஷ கருத்துகளுக்காக மன்றாடுதல், உதாரமான சிலநற்கிரிகைகளைப்புரிதல்ஆகிய இவைகள்எல்லாம் திருஇருதயத் திருநாளில் நீங்கள் செய்யத்தக்கனவாகும். இவைகளைவிட அன்பின்பரீட்சை அல்லது பரிசோதனை என்றும் ஒன்று உண்டு. அதையும் செய்யாது விடப்படாது. அன்பின் பரிசோதனை என்றால் என்ன? நாங்கள் ஆண்டவரில் வைத்திருக்கும் நேசம் உண்மையான நேசமா அல்லது வெறும்மாய்மாலமா என்று மனச்சாட்சியைச் சோதித்துப் பார்ப்பதுதான் அன்பின் பரிசோதனை. யேசுநாதருடைய இருதயம் மனுஷருக்காக நேசஅக்கினி மூண்டு எரிந்துகொண்டிருக்கிறது. திருஇருதயப்படங்களில் இதை நீங்கள் காண்கிறீர்கள். இப்படி ஆண்டவர் தமது அன்பை எங்களுக்கு வெளியாக்குவது நாங்களும் அவருக்குப் பதில்நேசம் காட்டும்படியாகத்தான்.

இப்போது ஒருகேள்வி. உங்களுக்கும் யேசுநாதசுவாமியின் திருஇருதயத்துக்கும் இடையிலுள்ள தொடர்பு என்ன? எட்டிலேதப்பிலே ஒருவரைக் காண்பதினால் அவருடன் அறிமுகப்படுவதுபோன்ற தொடர்பா? அல்லது நன்றாக உறுதிப்படுத்தப்பட்ட சிநேகித்தத்தினால் உண்டான தொடர்பா? நான் சொல்வதுக்குக் கருத்து என்னவென்று அறிவீர்களென்று எண்ணுகிறேன். நீங்கள் பள்ளிக்கூடத்துக்குப் போகும் பொழுதும் வரும்பொழுதும் சிறுவர் சிறுமிகளையும் வளர்ந்தவர்களையும் ஏறக்குறைய ஒவ்வொருநாளும் சந்திக்கிறீர்கள். சிலர் உங்களுக்கு அறிமுகம் ஆனபடியால் சலாம்சொல்லிவிட்டுப் போகிறீர்கள். வேறுசிலரைக் கண்டவுடன் அவர்கள் கிட்ட அணுகி இட்டமாக அவர்களுடன் சம்பாஷித்துக் கொண்டு போகிறீர்கள். ஏனென்றால் இவர்கள் உங்கள் சிநேகிதர்கள். அவர்களுடன் பேசிக்கொண்டுபோகும்நேரம் வெகு சொற்பநேரம்போல உங்களுக்குக் காணப்படுகின்றது. உங்களுக்கும் யேசுநாதருக்கும் இடையிலுள்ள தொடர்பு, உங்கள் சிநேகிதருடனுள்ள தொடர்புபோலத்தான் இருக்கிறதா? அவருடன் சம்பாஷிப்பது உங்களுக்குச் சந்தோஷமா? அதில் உங்களுக்கு அலுப்பு இல்லையா? அவரைப்பார்த்து மன்றாடிக்கொண்டிருக்க அல்லது சற்பிரசாதத்தில் இருக்கும் அவருடன் சம்பாஷித்துக்கொண்டிருக்க உங்களுக்கு உண்மையாகவே விருப்பந்தானா?

திருஇருதயத் திருநாள், நாங்கள் ஆண்டவருடன் பொருத்தனைசெய்து நல்ல பிரதிக்கினைகளைத் தீர்மானிக்கும் நாள். "நான் யேசுநாதருடன் இட்டமாகப் புழங்குவேன்." என்றது உங்களுடைய ஒருபிரதிக்கினை ஆதல் வேண்டும். ஆதலால் நான் அவரைப்பற்றி அதிகம்அதிகம் அறியவேண்டும். அவருடைய சீவியத்தைப்பற்றியும் புண்ணியங்களைப்பற்றியும், அவருடைய திருத்தாயாரைப்பற்றியும் நான் அறியவேண்டும். இவைகளைப்பற்றி நான் பிறருக்கும் அறிவிக்கவேண்டும். இது என் கடமை. ஏனென்றால், நான் திருஇருதயத்தின் சிலுவை வீரன். இவ்விதமாகத்தான் நீங்கள் திருஇருதயப் பெருநாளைக் கொண்டாடவேணும். இப்படி நீங்கள் திருநாளைக் கொண்டாடினால் உங்களுக்கு எவ்வளவோ ஆசீர்வாதங்கள் உண்டாகும். யேசுநாதர் தமக்குச் செய்யப்பட்டவைகளை ஒருபோதும் மறக்கமாட்டார்.

**யேசுவின் திருஇருதயமே உமது சின்னச் சிலுவைவீரர்களை ஆசீர்வதியும்.**

✠ ஜே. ஏ. கியோமார், O.M.I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்

## பத்திமலவில் தேவதாயாரின் காட்சி

(ஞா. அ.)

### மூன்றும் காட்சியின்பின் சம்பவித்த சில விசேஷங்கள்

மூன்றும்காட்சி அளிக்கப்பட்டபோது கூடியிருந்த சனங்கள் மத்தியிலே பெரும் மனக்கிளர்ச்சி உண்டாயிற்று. அநேகர் அந்தப்பிள்ளைகள் சொன்னதை நம்பத்தொடங்கினார்கள். என்றாலும் முன்னர் அந்தப் பிள்ளைகளுக்கு இருந்த தொந்தரைகளிலும் இன்னும் அதிகமானவைகள் ஏற்படத்தொடங்கின. அவர்களுடைய வீட்டுக்கு வருகிறவர்களும், போகிறவர்களும், கேள்விகள்கேட்கிறவர்களும் வீட்டிலுள்ளவர்களுக்குப் பெரும் இடைஞ்சலைக்கொடுத்தார்கள். ஆனதினால் வீட்டிலுள்ள பெரியார்கள் பிள்ளைகளைச் சினந்தார்கள். அடித்தார்கள். என்றாலும் மாதா பிள்ளைகளுக்கு வேண்டிய மன ஆறுதலையும், தைரியத்தையும் அவர்களுக்குக் கொடுத்தார்.

பத்திரிகைகளும், பிரசுரங்களும் இந்தக் காட்சிகளைப்பற்றிப் பலவாறாய் எழுதத் தொடங்கின. கத்தோலிக்க குருமாரும், கத்தோலிக்க பத்திரிகைகளின் ஆசிரியர்களும் பொதுவாக மவுனம்சாதித்தார்கள். கத்தோலிக்க பத்திரிகைகள் யாதும் எழுதியபொழுது மிகவும் புத்தியுடனும், ஆராய்வுடனும் இந்தச்சம்பவங்களை எடுத்தாளவேண்டுமென்று புத்திபுகட்டின. ஆனால், மற்றும் பத்திரிகைகளோ யாதொரு ஆராய்வுமின்றி மனம்போனபடி பலதையும் வரைந்துவிட்டன. சில பத்திரிகைகள் அவையெல்லாம் புதுமை, புதுமை என்று பரப்பிப் பணம்சம்பாதிப்பதற்குக் குருமாரால் செய்யப்பட்டுவரும் செப்படிவித்தையென்றும் எழுதிவிட்டன.

அந்தநாட்களிலே அந்தப்பகுதிக்குக் கவண்மேந்து ஏசன்றரைப்போல் உத்தியோகம்வகித்தவன் தேர்பிளான்தியே என்ற நாமமுடையவன். அவனோ வேத அனுசாரம் அற்றவன். "பிறிமேசன்". குருமாரை என்றுமே பகைப்பவன். வேதத்துக்கும் குருமாருக்கும் தீங்குசெய்யத் தனக்குத் தக்கஒருதருணம் கிடைத்தது என்று சந்தோஷப்பட்டான். அந்த மூன்று பிள்ளைகளையும், அவர்களின் பெற்றோரையும் வரும்படி கட்டளை அனுப்பி, அவர்களைப் பலவிதமான கேள்விகளாலும் பொய்யரென நிரூபிக்க ஆரம்பித்தான். காட்சிகளைப்பற்றி அவர்கள் சொன்னயாவும் பொய்யென்று பிரசித்தமாய் ஒப்புக்கொள்ளாவிடின் அவர்களுக்குக் கடின தண்டனை விதிப்பதாக மிரட்டினான். "ஒரு அம்மாள் உங்களுக்குக் காட்சிதந்தாளா? இரகசியங்களும் சொன்னாளா? நல்லது அந்த இரகசியங்களைச் சொல்லிவிடுங்கள். அல்லாதுபோனால் உங்களைக் கொலைசெய்வேன்'' [illegible]ன்று அவன் அந்தப் பிள்ளைகளைப் பயமு[illegible]த்தினான். பிள்ளைகள் அவனுக்குத் [illegible]ாரிக்கமாகச் சொன்னதாவது: "நீ[illegible]ங்களைச் சாகச்கொன்றாலும் காரியமில்[illegible]. நாங்கள் மோட்சம் போவோம்'' என்பதே.

ஆவணிமாசம் 13-ந்தேதி 18,000 சனங்கள் காட்சிஅளிக்கப்படும் மைதானத்திலே பெரியகும்பலாய் வந்துகூடினார்கள். எல்லாரும் செபமாலை ஓதிநின்றார்கள். மத்தியானவேளை ஆயிற்று. பிள்ளைகளையோ அவ்விடத்தில் காணவில்லை. இடிமுழக்கமும், மின்னலும் உண்டாய் ஒரு அழகான முகிலும் காணப்பட்டது. மோட்சத்திலிருந்துவந்த தரிசனம் அவ்விடத்தில்நிற்பதாக எல்லாரும் உணர்ந்தார்கள். பிள்ளைகளை அங்கே காணாததினால் எல்லாரும் பயத்தால் நிறைந்தவர்களாய்த் துக்கத்துடன் வீடுதிரும்பினார்கள். ஒருவரும் காட்சிஅளித்தவரைக் காணவில்லை.

பிள்ளைகள் எங்கே? தேர்பிளான்தியே அவர்களைப்பிடித்து ஏலவே சிறையில் அடைத்துவிட்டான். அவன் தன்னால்ஆனமட்டும் அவர்களை நயத்தாலும், பயத்தாலும் வாட்டினான். ஒவ்வொரு பிள்ளையையும் தனித்தனியே அழைத்து "நீ சொன்னதெல்லாம்பொய் என்றுசொல்லு அல்லாதுபோனால் உன்னுடைய சிரசை வெட்டுவேன். எண்ணெய் கொதிக்கக் காய்ச்சிய கடாரத்தில் உன்னைப் போடுவேன். பெரிய ஒருஇ[illegible]ப்புத் தாச்சியில் போட்டு உன்னைப் பொரிப்பேன்'' என்று மிரட்டினான். பிள்ளைகளோ அவனுடைய விரட்டுதலுக்கு அசையவில்லை. ஈற்றிலே ஆற்றாமல் அந்தமூடன் பிள்ளைகள் மூவரையும் விடுதலைசெய்து, பத்திமாவின் கட்டளைக்குருவானவரிடம் அனுப்பிவைத்தான். மாதாவின் உதவியால் பிள்ளைகள் அவனைத் தோற்கடித்துவிட்டார்கள்.

## சிலுவைவீரர் கோணம்




கவனிப்பு:—சிலுவைப்படை வீரர்களில் மிகவும் கரிசனையுள்ளவரான எங்கள் மேற்றிராணியார் விடுத்த சுற்றுநிருபத்தை விசேஷமாகச் சிறுவர் சிறுமிகளுக்கே எழுதியிருக்கிறார். ஆனால் பராயப்பட்டசிலுவைவீரர்களும் அதனை வாசித்துப் பெரும்நன்மை அடையலாம். சிலுவைவீரர்கள்சபை ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலை உபாத்திமார்களும், வேறுகூட்டங்களின் காரியகாரரும் இதனை வாசிப்பதுடன் அதன் சாரத்தை மாணக்கருக்கும், மற்றவர்களுக்கும் விளங்கப்படுத்துவார்களாக. விசேஷமாக திருஇருதயத்துக்கும் சிலுவைவீரருக்கும்இடையில் இருக்கவேண்டிய தொடர்பைப் பற்றியும், திருஇருதயத் திருநாளில் சிலுவைவீரர்கள் செய்யவேண்டிய நல்ல பிரதிக்கினைகளைப்பற்றியும் ஆண்டவர்அவர்கள் சொல்வதைத் தெளிவாக விளங்கப்படுத்துவார்களாக.

தற்போது சிலுவைப்படையைப்பற்றி வந்த குறிப்புகள் சிலவே. ஆயின் இனிவரும் அறிக்கைப்பத்திரத்துடன் மீதியும்சேர்த்து வெளியிடப்படும்.

இ. கு. வி.

திரு இருதய கருமசாலை
மேற்றிராணியார்மாளிகை,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதசாட்சிகளின் ஞாபகம்

### நான்காம் நூற்றாண்டின் ஞானவைபவம்

### திவ்வியஇஸ்பிரீத்துச்சாந்துவின் திருமகோற்சவம்

யாழ்ப்பாணம், பரிசுத்த புதுமைமாதா கோவில் கிறீஸ்தவர்களும், அவர்களின் சாகியத்தினராய் (கடையர் என்னும் மகா குலக் கமண்டலர்) ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, மன்னார், தலைமன்னார், மாதோட்டப் பகுதி[illegible]ள்ள கிறீஸ்தவர்களும் பண்டுதொட்[illegible] பலநூற்றாண்டுகளாகப் பரவணிப[illegible]யாய்த் திவ்விய இஸ்பிரீத்துச்சாந்து [illegible]வேசுரனின் திருநாளைத் தங்கள் சா[illegible]திப்பெருநாளாகக் கொண்டாடிவருகின்றார்கள். அன்பின் சொரூபியும், அர்ச்.தம திரீத்துவத்தின் மூன்றும்ஆளுமாகிய பரிசுத்த ஆவியானவரின் திருநாள் இச்சாகியத்தினர்க்குரிய ஓர் தனிப்பெருநாளாய் வரவேண்டியகாரணம் என்ன? இவர்கள் தாய்நாடாகிய இந்தியாவிலிருந்து மன்னாரையடைந்து இலங்கையின் புராதன குடிபதிகளாகிய தோடு மெய்வேத விசுவாசிகளுமாகித் திவ்விய இஸ்பிரீத்துச்சாந்து சருவேசுரன் தங்களுக்கருளிய திடமெனும் திருக்கொடையைக்கொண்டு கிறீஸ்து தேவஇராசாவின் மெய்மறைக்காகக் குருதிசிந்தித் தங்கள் சீவனைவிட்ட அந்த நல்ல ஞாபகத்துக்குரிய மகா சம்பவத்தை நினைவூட்டவும், அம்மகத்துவமிக்க ஞானவெற்றியையீந்த நல்லதேவனை மகிமைப்படுத்தவுமாக இத்திருநாள் அக்கால ஞானக் கோபாலர்களால் இவர்களுக்கு ஓர் முதுசொம்போல் அருளப்பட்டமையே. இது தலைமுறை தலைமுறையாக அறியப்பட்டு வரும் ஓர் உண்மையாகும்.

ஆகவே, இம்மகா சம்பவம் நடந்தேறிய நான்காம் நூற்றாண்டு வைபவத்தையும், தங்கள் மு[illegible]னோர் மெய்வேத விசுவாசிகளான அருட்சம்பவத்தையும், இவற்றி[illegible]கெல்லாம் நடுநாயகரான திவ்விய இஸ்பிரீத்துச்சாந்து சருவேசுரனின் திருநாளுடன்சேர்த்து இம்மாசம் 20-ந்திகதி ஞாயிறுவாரம் ஆடம்பர சிறப்பாய் ஒருங்கே கொண்டாடுவான் முன்சொன்ன விடங்களிலுள்ள அச்சாகியத்தினர்கள் பெருந்திரளாக யாழ்ப்பாணம் பரிசுத்த புதுமைத்தாயாரின் பொன்னாலயத்திலே ஒன்றுகூடலானார்கள். ஆயத்ததிரிதின உற்சவங்கள் 17-ந்திகதி துவசாரோகணத்துடன் ஆரம்பமாகி நடந்தேறின. முதனாளாகிய 19-ந்திகதி சனிக்கிழமை பலிபீடமானது மேல்நாட்டுப் புஷ்பங்களினால் அலங்கரிக்கப்பெற்றிருக்க, திவ்விய இஸ்பிரீத்துச்சாந்து சருவேசுரனின் பொன்மயத்தோற்றமும், மாடப்புறாவடிவமுமான பூர்வகாலத் திருவுருவச் சின்னமானது அப்பீடத்தின் மேலாக உயரிய சிம்மாசனத்தில் ஸ்தாபிக்கப்பெற்றுத் தேசோமயமாய் இலங்கியது. கோவிலின் முன்றிலில் அமைக்கப்பெற்றிருந்த சதுராகரமான பந்தரும் அழகுறச் சிங்காரிக்கப்பட்டு, அதன் முற்பக்கத்திலே நிறுவப்பட்டிருந்த சித்திரத் திரையானது வேதசாட்சிகளின் தூயசம்பவத்தை ஞாபகப்படுத்துவதாய்க் காட்சியளித்துக்கொண்டிருந்தது.

திருநாளன்றுகாலை மகாவந். நம் மேற்றிராணியாண்டவர் பல குருமார் சமேதராய்க் கோவில் முன்றிலை அடையவே, கட்டளைச்சுவாமியார் ஆசாரமுறைப்படி அவரை வரவேற்றுப் பலிபீடத்தண்டை அழைத்துச்சென்றார். அங்கே ஆண்டவர் அவர்கள் ஆசாரிய வஸ்திரங்கள்தரித்து பாடற்பூசை நிறைவேற்றினர். பூசையின்போது அதிகமானோர் திருவிருந்தருந்தினார்கள். சாயந்தரம் செபமாலையின்பின் குருப்பிரசாதிகள் பலர் அணைபுரிய ஆண்டவர் அவர்களால் வேஸ்பரும், 'வேனிக் கிறேயாத்தோர்' எனும் திவ்விய இஸ்பிரீத்துச்சாந்துவின் கீதமும் பாடப்பட்டன. அதன்மேல் அருட்பிரவாகம்நிறைந்த குருப்பிரசங்கியாரான நல்லூர் வண. சுவாமி. ஞானப்பிரகாசர் அவர்கள் போதக பீடத்தெழுந்து, திவ்விய இஸ்பிரீத்துச்சாந்து சருவேசுரனின் ஆகமனத்தைப் பற்றியும், அவரது திருக்கொடைகளைப் பற்றியும், நாம் அவருக்குச் சாட்சிகளாகும் முறைகளைப்பற்றியும், வேதசாட்சிகளின்வீரமுழக்கத்தைப்பற்றியும்இம்மகோற்சவம் அத்துடன் சம்பந்தப்படுவதைப் பற்றியும் வடிதங்கமென ஓர் பிரசங்கஞ் செய்து விசுவாசிகளின் இருதயங்களிலே இருதயங்களின் பிரகாசமானவரைப் பிரகாசித்துவிட்டனர். பின்னர் பலபத்திக் கூட்டங்களைச்சேர்ந்த பாலர் பாலகிகள், வாலர் கன்னியர்கள், தத்தம் சபைவிருதுகளுடன் இருநிரையே முன்செல்ல, மற்றும் திரளான விசுவாசிகள் பின்தொடர, பரிசுத்த காணிக்கைத் தாயாரின் பெரிய திருச்சுரூபமானது திருப்பவனி செல்வதாயிற்று. சுற்றுப்பிரகாரத்திலே டேவிற்வீதியின் சிறப்பைப் பாராட்டாதிருக்கமுடியாது. திருச்சுரூபம் கோவிலையடைந்ததும் தேவநற்கருணை ஆசீர்வாதத்துடன் திருநாள் கொண்டாட்டம் இனிதே முற்றுப்பெற்றது.

அதன்மேல் மேற்றிராணியாண்டவர் பல குருமார் சமேதராய்க் குருமனைசெல்லவே, அங்கு கட்டளைச்சுவாமியார் உபசாரத்துடன் அவரைவரவேற்றனர். ஆண்டவரவர்கள் உயராசனத்தெழவே, ஊர்காவற்றுறை உதயதிசை அர்ச். அந்தோனியார்கோவில் பிரதம கட்டளைகாரரான திரு. S. அந்தோனிசாமி ஆண்டவரவர்களுக்கும், மன்னார் மதுபரிபாலன கந்தோரில் கடமைபார்க்கும் திரு. எம். எல். அருமைநாயகம் கட்டளைச்சுவாமியாருக்கும், சாவகச்சேரி அர்ச். விகோரியார் கோவிற் சக்கிறிஸ்தாம் திரு. கே. மனுவேற்பிள்ளை உதவிக்கட்டளைச் சுவாமியாருக்கும் மாலைகள் சூட்டினார்கள். ஆண்டவர் அவர்களுக்கு வங்கதேனியா றெயில்வே ஸ்றேஷன் உத்தியோகஸ்தரான திரு. வி. பி. மரியாம்பிள்ளை ஓர் வந்தனோபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்தனர். ஹேயிங்மாஸ்றர் எம். நோபேட் பணத்தெட்சணை வழங்கினர். திரு. எல் சி. பொன்னுக்கோன் அவ்வைபவத்தைப்பற்றியும், நான்காம் நூற்றாண்டைப்பற்றியும் சிலபேசி ஆண்டவரவர்களுக்கும், மற்றும் குருப்பிரசாதிகளுக்கும்சோபனங்கூறினர்

பின்னர் புன்னகைபூத்த வதனகோலராய் ஆண்டவரவர்கள் எழுந்து பேசியதாவது: அருமையான பிள்ளைகளே! தலைமுறை தலைமுறையாக நீங்கள் கொண்டாடிவந்த திவ்விய இஸ்பிரீத்துச்சாந்து சருவேசுரனின் திருநாளையும், அத்துடன் மன்னார் வேதசாட்சிகளின் நான்காம்நூற்றாண்டு விழாவையும் இன்று கொண்டாடியது நமக்கு மிகவும் சந்தோஷம். திவ்விய இஸ்பிரீத்துச்சாந்து சருவேசுரனின் வரத்தைப்பெற்று நல்ல கிறீஸ்தவர்களாயிருக்கப் பிரயாசப்படுங்கள். மன்னாரிலே எங்கள் திருமறைக்காக உயிரைவிட்ட உங்கள்சாகிய முன்னோருடைய விசுவாசமும், முன்மாதிரிகையும் பாராட்டத்தக்கன. வேதசாட்சிகள் ஆனவர்களில் வேறுசிலரும் இருக்கிறார்கள். உங்கள் சாகியத்தவர்களாய்ப் பலவிடங்களிலுமுள்ள கிறீஸ்தவர்களை நாம் அறிவோம். அவர்களும் விசுவாசம் நிறைந்த கிறீஸ்தவர்களாய்ச் சீவிக்கக்காண்பது பேரானந்தம். உங்கள் பரிசுத்தமான சீவியத்தினால் மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாயிருங்கள் என்பனவாகக்கூறி ஆசிரீந்தனர். ஈற்றில் திரு. அ. அமிர்தநாதன் தம்பு பேசியவிடத்து, எங்கள் அழைப்பின்பேரிலே பிறவிடங்களிலிருந்து சமுகந்தந்து இக்கொண்டாட்டத்தில் பங்குபற்றியவர்களுக்கும், உதவிகள் புரிந்தவர்களுக்கும், தந்திகள் கடிதங்கள் மூலமாய் தங்கள் ஆதரவையும் ஆசீர்வாதங்களையும் அனுப்பிய குருப்பிரசாதிகள் கனவான்களுக்கும், யாவையும் சீராய்ச்சிறப்பாய் நடத்திமுடித்த கட்டளைக்குரவரான அதிவண. பி. எம். பிரான்சீஸ் சுவாமியாருக்கும்,உதவிக்கட்டளைக்குரவரான வண. ஈ. பொமிக்கல் சுவாமியாருக்கும் எங்கள் தாழ்மையான வணக்கத்தையும் நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்ளுவதாகக் கூறிமுடித்தார். இத்துடன் வைபவம் நிறைவெய்தியது.

கடிதர்

## செம்பியன்பற்று அர்ச். பிலிப்புநேரியார் திருநாள்

செம்பியன்பற்றிலே கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் அர்ச். பிலிப்புநேரியார் திருநாளானது வழமைப்பிரகாரம் இம்மாசம் 17-ந்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 26-ந்திகதி முடிவாகும்.

24-ந்திகதி இவ்வூர்ப் பாலியரால் சிறந்தவோர் "டிறாமா" நடாத்தப்படும். 26-ந்திகதி இரவு இவ்வூர் வாலிபரால் ஓர் நாடகம் நடாத்தப்படும்.

S. A. ஞானப்பிரகாசம்
கட்டளைக்குரு

செம்பியன்பற்று
15-5-45


# விற்றோ

**சுகந்தரும் மதுரபானமேயன்றி அது ஓர் பரீட்சார்த்த பானமன்று.**

சரீர ஆரோக்கியத்தை அளிக்கக்கூடியனவும் மனதுக்குவந்தனவுமான பொருட்களைக்கொண்டு சாஸ்திரமுறையாகத் தயாரிக்கப்பெற்றிருக்கின்றது.

இலேசான பானவகைகளை விரும்புவோர்
**விற்றோவையல்லாமல்**
வேறு பானவகையைக் காணமுடியாது

**"விற்றோ" செய்கைக் கம்பெனி**
**தந்தி:— "விற்றோ" டெஹிவலை**

சில்லறை விற்பனையாளர்:
எல். எஸ். இராசநாயகம்
13, சவிரிமுத்து முதலியார் றேட்டு
யாழ்ப்பாணம்


## மரணசங்கதி

மாதகல் கந்தகுலோத்துங்க முதலியார் வழித்தோன்றலும், அரசினரின்கீழ் பிரதம ஓவசியராய் விளங்கியிருந்தவருமான திரு. எஸ். ஐ. முத்தையா அவர்களின் இரண்டாம் புத்திரியும், மலாய்நாட்டிலே துவிபாஷிக முதலியாராயிருந்து காலஞ்சென்ற திரு. எஸ். சி. பொன்னையா அவர்களின் மனைவியாருமான திருமதி சிசில் என்பவ விருத்தாப்பிய நோய்கண்டு சென்ற 19-ந்திகதி சனிக்கிழமை அதிகாலை காலஞ்செல்லலாயினர். மரிக்கும்போது இவவுக்கு வயசு 77. இவ தேவபத்தி, குருபத்தி, தருமசிந்தையுள்ள ஓர் உத்தமி. சம்பத்திரிசியார்கல்லூரித் தலைமை ஆசிரியராயிருந்து இளைப்பாறிய திரு. டி.சவிரிமுத்து அவர்கள் இவவுடைய புத்திரியை மணமுடித்த மருகர். அன்று சாயந்தரம் பலவூர்களிலுமிருந்து திரளான இனசனர் வந்துகூடிய சமுகத்திலே வண. எஸ். வேந்தர்கோன் சுவாமியார் துக்கசங்கீதம்பாடிக் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்கப் பிரேதசேமம் நடைபெறலாயிற்று. இவவை இழந்து துன்புறுவாருடன் நானும் அனுதாபப்படுகின்றேன்.

R. I. P. (கடிதர்)

## திரு. எம். ஏ. யோசெவ் அவர்களின் தேகவியோகம்

புலோலியைத் தமது ஜெனனபதியாகக் கொண்டவராய், அப்பதிவிளங்கும் அர்ச். சூசையப்பர் கோவிலைச்சேர்ந்த கத்தோலிக்க பிரமுகர்களில் ஒருவராய், குலநலம் குணநலம் கனதனம்மிக்கவராய் காலங்கண்ட பெரியாராய், பலராலும் நன்கறியவும் நன்குமதிக்கவும்பெற்றவராய் விளங்கியிருந்தவரான திரு. எம். ஏ. யோசெவ் அவர்கள் காத்திராப்பிரகாரம் கடினநோய்கண்டு தகுந்த வைத்தியசிகிட்சை செய்யப்பட்டும் குணமுறாது அந்திய தேவதிரவியானுமானங்களை நல்லறிவுடன்பெற்று இம்மாசம் 13-ந்திகதி ஞாயிறுவாரம் அதிகாலை மரணத்திரையில் மறையலாயினார். மரிக்கும்போது இவருக்குவயசு 64. இவர் போஸ்ற்மாஸ்றராகப் பலவருடகாலம் இலங்கையின் பலவிடங்களிலும் சிறப்பாகக் கடமையாற்றிச் சில வருடங்களின்முன் இளைப்பாறியிருந்தார். இவர் ஓர் உத்தம கத்தோலிக்கர். தேவபத்தியில் சிறந்தவர். செபமாலைப்பக்தர். தமது கடைசியாத்திரையாக மருதமடுச் செபமாலை மாதாவின் இந்தவைகாசி உற்சவத்தின்போது தமது பாரியார், பௌத்திரர்களுடன் அப்பதிக்கு யாத்திரைசெய்து திரும்பியிருந்தார். இவர் தமது சீவிய காலத்தில் ஓர் உத்தம கத்தோலிக்கராய் ஏனைய கத்தோலிக்கருக்கு ஓர் நன்முன்மாதிரிகையாய், தர்மசீலராய், இன்சொலாளராய், ஏழைகளின் அன்பராய் இருந்துவந்தார். வதிரி திரு. இருதயகல்லூரி ஆசிரியர்களில் ஒருவராயிருந்து, தமது அமைதியான போக்காலும், இனியகுணநடை விசேஷத்தாலும் எவர்க்குமே அன்பராய் அருமையானவராய்விளங்கும் திரு. யோசெவ் எட்வேட் அவர்கள் இவரது ஏகபுதல்வராவர். இவரின் பிரேதமானது அன்று சாயந்தரம் விலைபெற்ற அழகிய பேழையில்வைத்து, வண. குருப்பிரசாதிகள், சங். சந்நியாசர்கள், கன்னிகாஸ்திரீகள், திருஇருதய கல்லூரி மாணவர்கள், மற்றும் திரளான இனசனர், சிநேகிதர், பெரியமனுஷர்கள் கூடியசமுகத்திலே வண. கட்டளைச்சுவாமியார் திக்கசங்கீதம் பாடிக் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்கத் தேசாசார வேதாசார முறைகளுடன் புதிய கல்லறையில் பூமதானம் செய்யப்பட்டது. இவரை இழந்து துன்புறும் பாரியார், புதல்வர், மருமகள், பேரப்பிள்ளைகள் மற்றுமுள்ளஇனசனருடன் யானும் அனுதாபப்படுகின்றேன்.

R. I. P. (கடிதர்)

## ஐரோப்பிய வெற்றியின் சிந்தனைகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிறேமேயென்று ஏங்கினபலர் செட்டாகச்சீவிக்கப் பயின்றுகொண்டனர். பணத்தில் மிதந்துகொண்டு வறியோர்நிலைமை கண்டிரங்காத கல்நெஞ்சர்பலர் வறுமை எப்படிப்பட்டதென்று அனுபவிக்கத் தொடங்கிவிட்டனர். வறுமையில் அழுந்தினோமே,பணக்காரராகமாட்டோமா என்று பெருமூச்சடித்த பலர் பணமூச்சில் திணறுகின்றனர்.

தங்கச் சிம்மாசனத்தில் அமர்ந்து தமக்குநிகர் யாரென்றிருந்த எத்தனையோ அரசரின் இரத்தினமுடிகள் தரையிலுருண்டுவிட்டன. "வெறுங்கை முழம்போடுமா" என்று கேட்டவர்கள் முழம்போடப் பழகிவிட்டனர். "ஐந்தும் மூன்றுமுண்டானால் அறியாப்பெண்ணும் கறிசமைப்பாள்" என்று பேசிக்கொண்ட பலர் மூன்றும் மூன்றுமிருந்தால் போதுமென்று கண்டுவிட்டனர். "அரிசிகொண்டு அக்காள் வீட்டுக்கா போகவேண்டு"மென்று கேட்டுக்கொண்டிருந்தவர்கள் அப்படிஆத்தாள்வீட்டுக்கும் போய்வரப் பழகிவிட்டனர்.

ஆயுத்தமே! கொடிய யுத்தமே! ஆறுவருட யுத்தமே! நீ உலகினுக்கு எத்தனை பாடங்களைப் படிப்பித்துவிட்டாய். எத்தனை கோலங்களைப் புதுப்பித்துவிட்டாய். ஆயிரமா? பதினாயிரமா? லட்சமா? லட்சாதிலட்சம் உயிர்களை உறிஞ்சிக்குடித்துவிட்டாயே. இன்னும் போய்த்தொலைய மனமில்லாமலா ஒட்டிநின்றுஎட்டிப்பார்க்கிறாய்? தொடக்கிய யுத்தத்தை முடிக்கத்தெரியாத கட்டைமீசை ஹிற்லர் தன் உயிரையே முடித்துக்கொண்டார். ஆனால் நமது குடைமந்திரி தொடக்கிய யுத்தத்தைச் சுருட்டுமந்திரி வெற்றிகரமாகவும், சித்திகரமாகவும் முடித்துவிட்டாரன்றோ! இக்கொடிய பயங்கரயுத்தம் "தன்கையே தனக்குதவி", "உணவைப்பெருக்கி உயிரைக்காப்பீர்" என்ற பாடங்களை இலங்கைக்குச் சட்டவட்டமாகப் படிப்பித்துவிட்டதோடு எத்தனை சுதேசபொருட்கள் தோன்றவும் செய்துவிட்டது. இன்னும் எத்தனையோதோன்ற இருக்கின்றன. துப்பாக்கியைத் தொட்டறியாத கைகளெல்லாம் சிப்பாய்வீரராய்த் திகழ்வது வருங்கால் சுதந்தர இலங்கைமாதாவின் மானத்தைக் காப்பதற்கல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாஞ சங்கதிகள்

—ஹிற்லர் தனக்குப்பிறகு ஜேர்மன் சர்வாதிகாரியாக நியமித்துவிட்டுப்போன அட்மிறல் டோனிற்ஸ் என்பவரும், ஜேர்மன் ஆகாயப்படைத் தலைவரான மாஷல் கோயறிங் என்பவரும் தற்போது யுத்த கைதிகளாய் இருந்துவருகிறார்கள். அதனால் இப்போது ஜேர்மனியில் ஜேர்மன் அரசாங்கமே இல்லை.

—ஜேர்மனியிலே கடைசியாகப் பஞ்சமுண்டாகமாட்டாதென்று இப்போது சொல்லிக்கொள்ள முடியாதாம். ஆனால், அங்கே சனங்கள் மத்தியில் பசிபட்டினியின் அறிகுறிகள் காணப்படுகிறவரையில் அமெரிக்க உணவுப்பொருள் ஜேர்மனிக்கு அனுப்பப்படமாட்டாதென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

—ஜேர்மனியிலே பெருந்தொகையான நாஸிய வங்கித்தலைவர்களும், கைத்தொழிற்தலைவர்களும் ஐக்கியசேனைகளால் கைதுசெய்யப்பட்டுவருகிறார்கள். நாஸிய யுத்தபலத்தைக் கட்டியெழுப்புவதற்குத் துணைச்செய்த இவர்களெல்லாம் யுத்த கிறிமினல் குற்றவாளிகளாகவே நடத்தப்படவிருக்கின்றார்கள்.

—அமெரிக்கவரசு யுத்தத்தில் இறங்கியதுமுதல் ஐரோப்பியயுத்தம் முடிகிறவரையிலே அமெரிக்க கடற்படை 126 ஜேர்மன் சப்மறின்களை ஆழ்த்தியிருக்கிறது. இவற்றுடன் பிரித்தானிய கடற்படை ஆழ்த்தியவைகளையும் சேர்க்குமிடத்து ஜேர்மனி எல்லாமாக ஐஞ்ஞூற்றுக்கு மேற்பட்ட சப்மறின்களை இழந்திருக்கிறது.

—பிரித்தானியிலும், இத்தாலியிலும் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பிரித்தானிய விமானப்படைகள் இந்த யுத்தத்திலே ஜேர்மனியிலும் அது அடிப்படுத்திய நாடுகளிலும் மொத்தமாக 9,86,000 தொன் வெடிகுண்டுகளை வீசியிருக்கின்றன. அமெரிக்க விமானப்படைகள் வீசியவெடிகுண்டுகள் எல்லாமாக 8,91,500 தொன்னாகும்

—ஐரோப்பியயுத்தம் நடைபெற்ற காலத்திலே லண்டன்நகர்வாசிகளான பொதுசனர் மத்தியில் கொல்லப்பட்டவர்கள் 29,896 பேரென்றும், காயமடைந்து ஆஸ்பத்திரிகளில் வைத்துப் பரிகரிக்கப்பெற்றவர்கள் 50,497 பேரென்றும் சென்ற வியாழக்கிழமை பிரித்தானிய பாளிமேந்திலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

—நாஸிய யுத்தகுற்றவாளிகளில் ஒருவராய் டக்றர் கிளெயின் என்பவரும் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். இவர் பெல்சென் எனுமிடத்துக் காவல்முகாமிலே ஆயிரக்கணக்கான ஆடவர்கள், பெண்கள் பிள்ளைகளைக் கொன்றழித்தவராம். நரம்புகளிலே பெற்றோலை இன்ஜெக்ற்பண்ணி எத்தனையோ மனிதரைக் கொன்றிருக்கிறாராம்.

—1944-ம்ஆண்டு ஐக்கியசேனைகளிடம் முசோலினி அகப்பட்டு றோமைநகருக்குச் சமீபமான அப்றூசிமலையிலுள்ள கிறான் சசோ எனுமிடத்து ஹொட்டலில் சிறைவைக்கப்பட்டிருந்தபோது அவரை இரகசியமாக மீட்டுப்போன ஜேர்மன் விமானப்படையின் தலைவனான கேணல்ஒட்ரோஸ்கோர்ஸ்செறி என்பவனும் அமெரிக்க ஏழாவது சேனையாலே கைதுசெய்யப்பட்டிருக்கிறான்.

—இரண்டாது ஐரோப்பியயுத்தம் முதலாவது உலகயுத்தத்திலும் ஏறக்குறையப் பதினேழுமாசம் நீடித்ததாய் இருந்தபோதிலும் முதலாவது மகாயுத்தத்திலே பிரித்தானிய சக்கிராதிபத்திய போர்வீரர்களில் கொல்லப்பட்டவர்கள் 9,08,371 பேராவர். ஆனால், இரண்டாவது உலகயுத்தத்திலே கொல்லப்பட்டவர்கள் 3,06,984 பேர் மாத்திரமேயாம்

—ஜேர்மன் இரகசியப்பொலிஸ் தலைவராயிருந்த ஹிம்லர் எங்கே இருக்கிறாரென்பது இரண்டாவது சேனைக்குத் தெரியுமென்றும், அதனால் அவரை எந்தவேளையிலும் கைதுசெய்யமுடியுமென்றும் லண்டனிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. தற்போது நாஸிய இரகசியப்பொலிஸ் அதிகாரிகள் ஜேர்மனி முழுவதிலும் வளைந்துகொள்ளப்படுகிறார்கள்.

—நாஸிகள் பிறநாடுகளிலிருந்து கடத்திச்சென்ற இருபத்தைந்துலட்சம்பேரை ஐக்கியசேனைகள் கடந்த இருமாசங்களிலும் கண்டுபிடித்திருக்கின்றன. இவர்களிலே நூற்றுக்கு 40 வீதமானோர் ருஷியர்கள். 23 வீதமானோர் பிராஞ்சியர்கள். 14 வீதமானோர் போலிஷ்காரர். 9 வீதமானோர் இத்தாலியர்கள்.

—ஒல்லாந்துதேச ஹேக்நகரிலே சர்வதேச நீதிஸ்தலம் எனும் நாமத்துடன் புதியதோர் உலகநீதிஸ்தலம் ஸ்தாபிக்கப்படவிருக்கிறது. இதிலே பதினைந்து நீதியரசர்கள் இருப்பார்கள். ஆனால் இவர்களிலே ஒரேசாதியினரான இருவர் நியமிக்கப்படமாட்டார்கள்.

## பழக்கமும் பரவணியும்

* ஐரோப்பிய யுத்தம் கடைசியாக ஐக்கிய தேசங்களுக்கு வெற்றியாய் முடிவாகிவிட்டதாம். அச்சுநாடுகள் ஈற்றில் மண்கௌவினவாம்.

* அப்போது யாழ்ப்பாணத்திலே மிகப்பேராய் நடந்தேறிய சற்பிரசாதசமாகமம்நிகழ ஒருவாரத்தின்முன் ஐரோப்பிய யுத்தம் ஆரம்பமானதாம்.

* இப்போது மன்னாரிலே சற்பிரசாத சமாகமம் மிகப்பேராய் நிகழ்ந்து இருவாரத்தின்பின் அந்த யுத்தம் முடிவாயிருக்கிறதாம்.

* ஐரோப்பிய யுத்தம் நடந்தேறிய ஐந்தரை வருடங்களிலும் அதன் முடிவைப்பற்றிய சோதிடங்கள் அனைத்துமே பொய்த்துப்போயினவாம்.

* கிரகநிலையை எடுத்துக்காட்டி, அத்துடன் தங்கள் சோதிடத்திறமையையும் காட்டிவிட முயன்ற சோதிடர்கள் யாவரும் அடியோடுபட்டனராம்.

* சோதிடம் பிழைத்ததோ, கிரகம் பிழைத்ததோ அல்லது சோதிடர்கள் தான் வயிறுபிழைத்தனரோ சொல்லத் தெரியவில்லையாம்.

* 1945-ம்ஆண்டு வைகாசிமாசம் 8-ந் திகதி ஐரோப்பியயுத்தம் முடியுமென்று சோதிடஞ்சொன்ன சோதிடர் ஒருவர் தானுமே கிடையாதாம்.

* ஐரோப்பிய யுத்தம் 8-5-45-இல் முடியுமென்று அப்போது சோதிடர் எவராவது சொல்லியிருந்தால் இப்போது அவருக்கும் ஓர் பிழைப்பாய்த்தான் இருக்குமாம்.

* இத்தனை பேரெல்லாம் சோதிடஞ் சொல்லியிருந்தும் ஐரோப்பிய யுத்தம் அவர்கள்சொன்ன சோதிடப்படி முடிய மறுத்துவிட்டதாம்.

* இலங்கையிலோ, இந்தியாவிலோ வேறெங்கேயோ சோதிடத்தில் பேரெடுத்த பெரிய சோதிடர்களையெல்லாம் ஐரோப்பிய யுத்தம் ஏமாற்றிவிட்டதாம்.

* ஐரோப்பியயுத்தம் ஏமாற்றிவிட்ட இந்தச்சோதிடர்களும் இதுவரை உலகில் எத்தனை ஆயிரவரை ஏமாற்றிவிட்டிருப்பரோ தெரியவில்லையாம்.

* இந்தப் பேரோங்கிய சோதிடர்களை ஏமாற்றிவிட்ட ஐரோப்பிய யுத்தம் எப்படிப்பட்ட ஒருபெரிய ஆசாமியாய் இருக்கவேண்டுமாம்.

* சோதிடமென்றது எல்லாம்பொய்; இனிமேல் இருக்கிறநாளைக்குச் சோதிடத்தையே நம்பமாட்டேனென்று மிஸ்டர் சோணசலமே சொல்லுகிறாராம்.

* போனதெல்லாம் போகட்டும் யப்பானிய யுத்தம் எப்போ முடியுமென்று சோதிடர்யாராவது சரியாய்ச்சொன்னால் தான் ஒருபிழை பொறுக்கிறாராம்.

* "கிறிஸ்த பள்ளிக்கூடங்கள் பிள்ளைகளுக்குக் 'குடிக்க'ப் பழக்குகின்றன என்று வதுளையில் ஓர்இடத்தில் டொக்டர் மலலசேகரா புகார்செய்" திருக்கின்றாராம்

* அந்த மலலசேகரா செய்திருக்கும் புகாரானது, 'நாய்க்கு வாய்த்த வெள்ளெலும்பு'போல் பாட்டைசாரிக்குவந்து வாய்த்திருக்கிறதாம்.

* கிறிஸ்தபள்ளிக்கூடங்கள் வருமுன் பள்ளிக்கூடப்பிள்ளைகள் பச்சைத்தண்ணீர் முதலாய்க் குடிக்கப்பழகியிருக்க மாட்டார்களாம்.

* கிறிஸ்தபள்ளிக்கூடங்கள் அல்லாத பிறபள்ளிக்கூடங்களில் படித்தபிள்ளைகளிலே குடிக்கிறவர்களுக்கு அதனை பழக்கிவிட்டவர்கள் யாரோவென்றுதான் ஒரு கேள்விபிறக்கிறதாம்.

* கிறிஸ்தபள்ளிக்கூடங்கள் வருமுன் இந்தநாட்டில் கள் சாராயம் கருப்பணி ஒன்றுமே கிடையாதாம். அப்பள்ளிக்கூடங்கள் வந்தபிறகே அவைகளும்வந்து பிள்ளைகள் அவற்றைக் குடிக்கப்பழகினார்களாம்.

* இலங்கையிலே செலவாகும் பெருந்தொகையான கள், சாராயம், மற்றும் குடிவகைகளை எல்லாம் குடிக்கிறவர்கள் கிறிஸ்த பள்ளிக்கூடங்கள் பழக்கிவிட்டவர்களேயென்று பைத்தியகாரர்தானும் சொல்லமாட்டார்களாம்.

* பௌத்த பாடசாலைகளில் கல்வி பயின்ற பிள்ளைகள் குடிக்கும்போது அப்பாடசாலைகள்தான் அவர்களைக் குடிக்கப் பழக்கிவிட்டனவென்று யாருஞ்சொல்வார்களானால், அவர்களுக்குத் தார் எண்ணெய் தலையில் தேய்த்து அவசியம் முழுக்காட்டவேண்டுமாம்.

* கிறிஸ்த பள்ளிக்கூடங்கள் அல்லாத பிறபள்ளிக்கூடங்களில் படித்த பிள்ளைகள் குடிப்பதில்லையென்று ஒருநாளுமே பாட்டைசாரிதானும் ஒப்புக்கொள்ளமாட்டாராம்.

* மிஷனரிமார், கிறீஸ்த பள்ளிக்கூடங்கள் என்றால், பாட்டைசாரிக்குப் பெரிய ஆனந்தமுண்டாய்க் காலடி பிட்டத்திற்பட ஓர்கால் துள்ளியெழும்புகின்றாராம்.

* கிறிஸ்த பள்ளிக்கூடங்களில் படித்தவர்களிலே குடியாதவர்களும் பதினாயிரக்கணக்கிலே இருக்கிறார்களாம். ஆகவே அப்பள்ளிக்கூடங்கள் இவர்களைக் குடியாதிருக்கப் பழக்கிவிட்டனவென்றும்நியாயம்முடிக்கலாமாம்.

* இந்தநாட்டிலே கிறிஸ்த பள்ளிக்கூடங்கள் வருமுன்னரே சனங்கள் கள் முதலியன குடித்திருக்கிறார்களாம். அதனால் அவர்களுக்குக் குடிக்கப்பழக்கிவிட்டவை அந்தநாளைப் பள்ளிக்கூடங்கள் என்றுதான் கொள்ளவேண்டுமாம்.

* கிறிஸ்த பள்ளிக்கூடங்களைப்பற்றி எவராவது நன்மையாகச் சொல்லும்போது தலையைக் கீழேபோட்டுக் கண்ணை இறுகமூடிக்கொள்வது பாட்டைசாரியின் பரவணிக்குணமல்லவாம்.


* எவராவது கிறிஸ்த பள்ளிக்கூடங்களைப்பற்றிக் குறைவாகச் சொல்லிவிட்டாலோ அதைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு தம்பட்டமடிப்பது அவருக்குப் பழக்கமாகிவிட்டதாம்.


# இருட்டுச் சந்தையை அகற்ற

பிறிமியர்

ஸ்டோரை

நாடுங்கள்




விலைக்கட்டுப்பாட்டுச் சாமான்கள் கட்டுப்பாட்டு விலைக்கும் மற்றும் சாமான்கள் மட்டானவிலைக்கும் பெற்றுக்கொள்ளக்கூடிய நிதார்த்தமான பண்டகசாலை.

**பிறிமியர் ஸ்டோர்ஸ்**

பெரியதெரு, யாழ்ப்பாணம்

PREMIER STORES

Main Street, JAFFNA.



## நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்

நீங்கள் தேகாரோக்கியமும் தீர்க்காயுளும்பெற்று வாழவிரும்புகிறீர்களா? உங்களுக்கு எல்லாப்பாக்கியங்களிலும் சிறந்த பிள்ளைப்பாக்கியம் வேண்டுமோ? உங்கள் புத்திரர் புத்திரிகளுக்கு உகந்த ஓர் சிறுபிள்ளை வைத்தியரை அறிய ஆசிக்கிறீர்களா? யாழ்ப்பாணம் பெரியதெரு, நம். 160, சில்லாலை மூத்துவைத்தியசாலையை நாடுங்கள். அங்கே எவர் எந்நோயால் வருந்துகிறாரோ அவர் அந்நோயைத்தீர்க்கும் ஔஷதத்தைப் பெற்றுக்கொள்வர்.

இங்ஙனம்,

**மூ. இ. பிரான்சீஸ்பிள்ளை உபாத்தியாயர்**
**தெல்லிப்பளை.**


## பழையமாணவர் சங்கம்

நீர்கொழும்பு, கடற்கரைத்தெருப் பாடசாலைப் பழையமாணவர்சங்கம் சென்ற 20-திகதி ஞாயிறுவாரம் காலை பத்துமணியளவில் தமிழ்இயக்க காரியதரிசி திரு. ஏ. பி. தம்பிராசா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் அவர் பேசியவிடத்து, நான்காம்முறையாகக்கூடிய உங்கள் சங்கத்திற்குத் தலைமைவகிக்க என்னைக் கேட்டுக்கொண்டதற்காகத் துதிகூறுகின்றேன்; ஆங்கில கல்லூரிகளில் நடைபெற்றுவரும் முறைகளை அனுஷ்டித்து இப்பாடசாலையிலும் பழையமாணவர் சங்கம் ஒன்று பங்குக்குருவானவரின் அனுமதியோடு சங். விறதர்மாரின் இடையறு முயற்சியால் நடத்தப்பட்டுவரக் காண்பது சந்தோஷமே; தற்கால தேச முன்னேற்றம் இளைஞர்கையிலேயே தங்கியிருக்கிறது; இப்பழையமாணவர்சங்கம் எதிர்காலத்தில் இவ்வூரை உச்சநிலைக்குக் கொண்டுவருமென உறுதியாய்ச்சொல்லலாம்; நீங்கள் எல்லாரும் ஒற்றுமையாயிருந்து இதிலே பழையமாணவரை அதிகமதிகமாய்ச் சேர்த்துக்கொள்வது உங்கள் கடமையாகும்; அதற்காகப் பழைய மாணவர் தினம் கொண்டாடப்பட வேண்டுமென்ற சாரப்படக் கூறலாயினர். அடுத்தபடியாகச் சங்கஉபதலைவர் எழுந்து இப்பழையமாணவர் சங்கத்திற்குப் பங்குக்குருவானவர் போஷகராய் இருப்பது உங்கள் பாக்கியமே; இதைச் சீராய்ச் சிறப்பாய்த்தொடர்பாய்க் கொண்டுநடத்துகிறதற்குத் தேவபத்தியும், நல்லொழுக்கமும் அத்தியாவசியம். இளைஞருக்குவிசேஷஆபரணமாய் விளங்கவேண்டியன தேவபக்தியும்,நல்லொழுக்கமுமே.இவ்விரண்டும்உங்கள் சங்கமாகிய விருட்சத்தில் நறுமணங்கமழுமாகில் பெருந்தொகையான மாணவர் அவற்றின் வாசனையால் வசியப்படுவரெனப் பேசினின்றார். அதன்மேல் காரியதரிசி எழுந்து சங்கம்நிலைத்து உறுபயன் அளிப்பதற்கு அடிப்படையாக அமையவேண்டியது ஐக்கியமே எனும் சாரப்படப் பேசலாயினர். கடைசியாகத் தலைவரின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

காரியதரிசி





அர்ச்.பிரான்சீஸ்கு சவேரியார்

தருமக்கோணம்

கேட்டநன்மைகள் அநுகூலமானதினால் அனுப்பப்பட்ட காணிக்கைகள்

| | ரூ.-ச |
|---|---|
| V. L. Fernando & Co. | 1-00 |
| பெயர்போட விரும்பாதவர் | 1-00 |
| R. X. தங்கராஜ் | 1-00 |
| எஸ். ஞானப்பிரகாசம், மன்னார் | 1-00 |
| M. பாக்கியநாதர் ஆசிரியர் | 0-50 |
| பேதுருப்பிள்ளை கபிரியேற்பிள்ளை | 1-00 |

அர்ச். சவேரியாரின் நாமத்தால் அனுப்பும் தருமங்களை பின்வரும் விலாசத்துக்கு அனுப்பவும்.

THE DIRECTOR,
St. Vincent De Paul
Society,
MANNAR.

சேன் வின்சென்ற் டீ போல்
சபைத் தலைவர்
மன்னார்


Printed and published for the Proprietor by Bastiampillai Santiagoepillai residing 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises Main Street Jaffna on Friday 25, May 1945.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org